TNNG030000482021

Presented on : 27-01-2021
Registered on : 23-08-2021

**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 26 -ம் நாள்

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் செவ்வாய்கிழமை

CNR.NO.TNNG03-000048-2021

**அசல் வழக்கு எண்.56/2021**

1. ராஜேந்திரன்
2. இளங்கோவன் .......வாதிகள்

//எதிர்//

1. தமிழக அரசு அதற்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
   நாகப்பட்டினம்
2. மாவட்ட ஆட்சியர்
3. மாவட்ட வருவாய் அலுவலர், நாகப்பட்டினம்
4. வருவாய் கோட்ட அலுவலர், நாகப்பட்டினம்
5. வட்டாட்சியர், நாகப்பட்டினம் .......பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.08.2026 அன்று

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:55:57 +0530

இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ச.ராமன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்................

## தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதிகள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ ரூ.2,00,000/- இழப்பீடு வழங்க உத்தரவிடக் கோரியும், நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் தவறுகளை சரி செய்து, காலஞ்சென்ற நாராயண கோனாரின் வாரிசுகளின் பெயரில் பட்டா வழங்க பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவாவிற்கான செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தி வைக்கக் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## I. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

வாதிகளின் தகப்பனார் நாராயணகோனார் வாய்மேடு மேற்கு கிராமத்தில் 8 புல எண்.111/11 ல் 21 1/2 செண்ட் சொத்தை 21.08.1958 தேதியிட்ட கிரய சாசனத்தின் மூலம் கிரயம் பெற்று அவர் இறக்கும்வரை உரிமையாளராக அனுபவித்து அவர் இறந்தபிறகு அவற்றை வாதிகளும், பிற வாரிசுகளும் சட்டப்படி பெற்று அனுபோகம் செய்து வருகிறார்கள் என்றும், சொத்தில் ஒரு பகுதியில் வாதிகள் கழிவறை மற்றும் குளியலறை கட்டியுள்ளார்கள் என்றும், பிற இடங்களில் தென்னை மரங்கள் நட்டு வளர்த்து வருகிறார்கள் என்றும், நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் பிரதிவாதிகள் தவறாக பட்டா எண்.575 னை புல எண்.101/11 ஏ 1 என 0.02.0 ஏர்ஸ் சுப்பிரமணிய கோனார்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:03 +0530

பெயரிலும், பட்டா எண்.1549 எனவும் உட்பிரிவு புல எண்.101/11 ஏ 2 என 0.04.5 ஏர்ஸ் பட்டா எண்.1549 வெங்கடாசல கோனார் பெயரிலும், உட்பிரிவு புல எண்.101/11 சி 0.03.0 ஏர்ஸ் என கூட்டாக பட்டா எண்.1959 சுப்பிரமணிய கோனார், வெங்கடாசல கோனார் மற்றும் நாராயண கோனார் பெயரில் எவ்வித ஆதாரமுமின்றி மாற்றி தவறுதலாக வழங்கிவிட்டனர் என்றும், அதன் விவரம் வாதிகளுக்கு தெரியவந்து 11.03.2013 தேதியில் 3 ம் பிரதிவாதியிடம் தவறை சரி செய்ய மனு தாக்கல் செய்து, அது, த.ப.31/2013 அ 4 நாள் 08.05.2013 என கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதேபோல் 4 ம் பிரதிவாதி அலுவலகத்தில் த.ப.32/2013, நாள்17.05.2013 எனவும், 5 ம் பிரதிவாதி வேதாரண்யம் வருவாய் ஆய்வாளர் மூலம் 05.06.2013 அறிக்கை கோரி அதன் விவரங்களை 4 ம் பிரதிவாதிக்கு தொ.மு.த.ப.22/2013 இ 1, நாள் 10.06.2013 அன்று வாதிகளின் கோரிக்கையின் உண்மையை உறுதிப்படுத்தி ஏற்பட்ட தவறை சரிசெய்து சொத்துக்களின் பட்டாவை நாராயண கோனாரின் 6 வாரிசுகள் பெயரில் மாற்றி உத்தரவிடலாம் என்று 10..06.2013 அன்று பரிந்துரை செய்துள்ளார் என்றும், தொடர்ந்து வாதிகள் 2019 ம் ஆண்டு வரையில் உரிய பட்டா மாற்றம் ஏற்படுத்தி தர வேண்டும் என பிரதிவாதிகளிடம் வலியுறுத்தி வந்துள்ளார்கள் என்றும், சுமார் 7 ஆண்டு காலமாக பிரதிவாதிகள் தவறை நிவர்த்தி செய்யாமல் எவ்வித காரணமுமின்றி காலம் கடத்தி வந்ததால் 05.10.2020 அன்று 2 லட்சம் நஷ்ட ஈடு கோரியும், பட்டா மாற்றம் கோரியும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றும், அதனை பெற்றுக் கொண்டும் பிரதிவாதிகள் எவ்வித பதிலறிவிப்பும் அனுப்பாமலும், மாறுதல் உத்தரவு வழங்கமாமலும் வீண் காலதாமதம் செய்து வருகிறார்கள் என்றும், எனவே, வாதிகளுக்கு, பிரதிவாதிகள் ரூ.1,00,000/- இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் தவறுகளை சரி செய்து, காலஞ்சென்ற நாராயண கோனாரின் வாரிசுகளின் பெயரில் பட்டா வழங்க

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:09 +0530

பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவா படி தீர்ப்பாக வேண்டும்.

## II. <u>பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் உண்மை நிலவரப்படியும் நிலைநிற்கத் தகுந்ததல்ல என்றும், 2 வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சியரை முதல் பிரதிவாதியாகவும், அரசுக்காக மாவட்ட ஆட்சியர் என்றும் போட்டுள்ளார் என்றும், 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையில்லாத நபர் என்றும், வழக்கின் செயலுறுத்துக்கட்டளை இறந்த நாராயண கோனாரின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டும் என்று கூறுவது சட்டப்படி தவறான ஒன்று என்றும், தமிழ்நாடு பட்டா பாஸ்புக் பதிவு சட்டத்தின்படி இந்த வழக்கை செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய முடியாது என்றும், இரண்டாவதாக சர்வே எண்ணில் ஏதாவது தவறுகள், மாற்றங்கள், அளவீடுகள் மாறியிருந்தால் அதை பொறுத்து பட்டா பாஸ்புக் சட்டத்தின்படிதான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க முடியாது என்றும், சர்வரின் ட்யூட்டியாக அரசு செயல்படும்போது அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கும்பட்சத்தில் அதற்கு மேல் அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம். அதிலும் திருப்தி இல்லை என்றால் வருவாய் துறையில் உரிய அலுவலரிடம் உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்துதான் பரிகாரம் காண இயலுமே தவிர சிவில் வழக்கு மூலம் பரிகாரம் காண இயலாது என்றும், அவ்விதம் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு ஏற்புடையதல்ல என்றும், 2ம் வாதியால் மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப்பட்ட மனுவானது 29.04.2019 அன்று வட்டாட்சியர், வேதாரண்யம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:14 +0530

நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டு, அதனடிப்படையில் மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் 2ம் வாதி அனுப்பிய மனுவினை வேதாரண்யம் வட்டாட்சியருக்கு அனுப்பியுள்ளார் என்றும், அதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் ஓ.மு.7261-19-ஆ 4, நாள் 08.05.2019 ன்படி விசாரணை செய்யப்பட்டு, வட்டாட்சியர் வேதாரண்யம் வருவாய் கோட்ட அலுவலர், நாகப்பட்டினம் அவர்களுக்கு நி.உ.மே.தி.1119, நாள் 01.0.2021 ல் விசாரணையை அனுப்பியுள்ளார் என்றும், அதுபோல் வட்ட சார் ஆய்வாளவர் அவர்கள் அறிக்கையும் புஷ்பவள்ளி என்பவர் கொடுத்த புகாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுவின்மீது கிராம நிர்வாக அலுவலர் கிராம ஆவணங்கள் மற்றும் அனுபோகம் ஆகியவற்றை விசாரணை செய்து, 101/11 ஏ 1 ல் 0.02 ஏர்ஸ் கோவிந்தகோனார் மகன் சுப்பரமணியகோனார் பெயரில் 101/11 ஏ 2, 0.04 ஏர்ஸ் மேலும் கோவிந்தகோனார் மகன் வெங்கச்சி பெயரிலும், 101/11 சி, 0.03.00 ஏர்ஸ் கோவிந்தகோனார் மகன் வெங்கடாசல கோனார் மற்றும் சுப்பிரமணிய கோனார், நாராயண கோனார் பெயரில் கூட்டாக உள்ளது என்றும், இந்த 3 புல எண்களில் கோவிந்த கோனார் மகன் நாராயண கோனார் 1958 ம் வருடத்திய 2363 என்ற ஆவணப்படி 101/11-ல் 21-1/2 செண்ட் ஆவணம் உள்ளது என்றும், புல எண்.101/11 சி, 11 ஏ 1 மற்றும் 10/11 சி-ல் 0.03.00 ஏர்ஸ் பட்டா எண்.1959 ன்படி வெங்கடாசல கோனார், சுப்பிரமணிய கோனார், நாராயண கோனார் பெயரில் கூட்டாக உள்ளது என்றும், பூஸ்துதியில் (நிலவியலில்) மூவருக்கும் தனித்தனியே அத்துவேலி இல்லாமல் உள்ளது என்றும், வாதிகளின் தந்தையின் பெயரில் கூட்டா உள்ளதால் தனியே அத்து வைத்து உட்பிரிவு செய்து, பட்டா மாற்றம் செய்து கொள்ள மனு செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்றும், 101/11 ஏ 1 ல் யூடிஆரில் கோவிந்தகோனார், சுப்பிரமணிய கோனார் பெயரில் உள்ள புல எண்ணை அவர்கள் வெங்கடாசல

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:20 +0530

கோனார் மகன் கோவிந்தராஜ் பெயரில் கிரய ஆவணம் எண்.591/2020 ன்படி பத்திரம் பதிவு செய்துள்ளார்கள் என்றும், எனவே வாதிளுக்கு 101/11 ஏ-1 ல் யூடிஆரில் திருத்தம் இல்லை என்றும், 101/11 ஏ 2 ல் வாதிகளுக்கு முழு அனுபவம் உள்ளது என்றும், 101/11 ஏ 2 யூடிஆரில் கோவிந்த கோனார் மன் வெங்கடாசல கோனார் பெயரில் உள்ளது என்றும், 101/11 ஏ 2 ல் கோவிந்த கோனார் மகன் நாராயண கோனார் வாரிசுகளின் பெயரில் பட்டா பெயர் மாற்றத்திற்கு மனு செய்யலாம் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் வேதாரண்யம் வட்ட சார் ஆய்வாளர் ஒரு வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், அதில் 101/11 ஏ 1 ல ஆனது "அ" பதிவேட்டில் கோவிந்தகோனார் மகன் சுப்பிரமணிய கோனார் பெயரில் உள்ளது என்றும், 101/11 ஏ 1 ஆனது சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து வெங்கடாசல கோனார் மகன் கோவிந்தராசுவுக்கு, (ஆவணம் எண்.,591/2020)ன்படி கிரயம் செய்யப் பட்டுள்ளது என்றும், எனவே நாராயண கோனார் வாரிசுகள் மேற்படி புல எண்ணில் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று ஆட்சேபணை செய்துள்ளார் என்றும், வேதாரண்யம் கிராமநிர்வாக அலுவலர் விசாரணை செய்த அறிக்கையில் மற்ற தகவல்களும் வாதிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எவ்வித நடவடிக்கையும் பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்று கூறுவது தவறு என்றும், கொரோனா சம்பந்தமான பணிகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளில் பிரதிவாதிகளுக்கு இருந்தும் வாதிகளின் மனுவிற்கு உரிய விசாரணை செய்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேல்முறையீட்டிற்கு வாய்ப்புள்ள போதிலும் அதை விடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றும், எனவே, வாதியின் வழக்கை இப்பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டு 5 ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:24 +0530

III. **<u>வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனயப்பட்டுள்ளன?</u>**

1. வாதிகளுக்கு பிரதிவாதிகள் ரூ.2,00,000/- இழப்பீட்டு தொகை கொடுக்க வேண்டும் என வாதிகள் கோரும் இழப்பீட்டு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
2. நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் தாவா சொத்துக்கு இறந்துபோன நாராயண கோனாரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு தவறுகளை சரிசெய்து பிரதிவாதிகள் பட்டா வழங்க வேண்டும் என வாதிகள் கோரும் ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
3. தமிழ்நாடு பட்டா பாஸ்புக் பதிவு சட்டத்தின்படி இந்த வழக்கை செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்று பிரதிவாதிகள் கூறும் கூற்று சரியா?
4. இதர பரிகாரம் என்ன?

**<u>கூடுதல் எழுவினா-1</u>**

1. உரிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

IV. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் 2ம் வாதி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வேதாரண்யம் மண்டல துணை வட்டாட்சியர் திரு. கலாநிதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:29 +0530

## V. <u>எழுவினா 3 மற்றும் கூடுதல் எழுவினா-1க்கான தீர்வு</u>

1) வாதி இவ்வழக்கினை வாதிக்கு பிரதிவாதிகள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ ரூ.2,00,000/- இழப்பீடு வழங்க உத்தரவிடக் கோரியும், நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் தவறுகளை சரி செய்து, காலஞ்சென்ற நாராயண கோனாரின் வாரிசுகளின் பெயரில் பட்டா வழங்க பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவாவிற்கான செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தி வைக்கக் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்குரையில் தாவா சொத்தாக நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், தகட்டூர் சார்பதிவகம், வேதாரண்யம் தாலுக்கா, வாய்மேடு மேற்கு பழைய புல எண்.101/11, 21 1/2 செண்ட், பூரா தவறாக உட்பிரிவு புல எண்கள்101/11 ஏய, 0.02.0 ஏர்ஸ் பட்டா எண்.575, 101/11 ஏ 2, 0.04.5 ஏர்ஸ் பட்டா எண்.1549, 101/11 சி, 0.03.0 ஏர்ஸ் பட்டா எண்.1959 என்று காண்பித்துள்ளார்.

2) வாய்மேடு மேற்கு கிராமத்தில் புல எண்.111/11 ல் 21 1/2 செண்ட் நிலத்தை 21.08.1958 தேதியில் வாதிகளின் தகப்பனார் நாராயண கோனார் கிரயம் பெற்று அவர் இறக்கும்வரை உரிமையாளராக இருந்து அனுபவித்து அவர் இறந்தபிறகு அவற்றை வாதிகளும், பிற வாரிசுகளும் அனுபோகம் செய்து வருவதாகவும், சொத்தின் ஒரு பகுதியில் கழிவறை மற்றும் குளியலறை கட்டியும் பிற இடங்களில் தென்னை மரங்கள் மட்டும் அனுபவித்து வருவதாகவும், இந்நிலையில் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் பிரதிவாதிகள் தவறாக உட்பிரிவு செய்து புல எண்.101/11 ஏ 1 என 0.02.0 ஏர்ஸ் சுப்பிரமணிய கோனாார் பெயரில் புல எண்.101/11 ஏ 2 0.04.5 ஏர்ஸ் வெங்கடாசல கோனார் பெயரில் புல எண்.101/11 சி 0.03.0 ஏர்ஸ் என கூட்டுப்பட்டா சுப்பிரமணிய கோனார், வெங்கடாசல கோனார் மற்றும் நாராயண

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:34 +0530

கோனார் பெயரில் எவ்வித ஆதாரமுமின்றி மாற்றி தவறுதலாக வழங்கிவிட்டதாகவும், அதன்பிறகு 11.03.2013 தேதியில் 3ம் பிரதிவாதியிடம் தவறை சரி செய்ய மனு தாக்கல் செய்து, அது நிலுவையில் உள்ளது என்றும், அதேபோல் 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் அலுவலகத்திலும் மனு கொடுத்து அது நிலுவையில் உள்ளதாகவும், 5ம் பிரதிவாதி வேதாரண்யம் வருவாய் அலுவலர் மூலம் 05.06.2013ம் தேதி அறிக்கை கோரி 4ம் பிரதிவாதிக்கு வாதிகளின் கோரிக்கையின் உண்மையை உறுதிப்படுத்தி தவறை சரி செய்து சொத்துக்களின் பட்டாவை நாராயண கோனாரின் 6 வாரிசுகள் பெயரில் மாற்றி உத்தரவிடலாம் என்று 10..06.2013 அன்று உத்தரவிட்டுள்ளதாகவும், 7 ஆண்டு காலமாக பிரதிவாதிகள் தவறை நிவர்த்தி செய்யாமல் 05.10.2020 அன்று 2 லட்சம் நஷ்ட ஈடு கோரியும், பட்டா மாற்றம் கோரியும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்ததாகவும், அதனை பெற்றுக்கொண்டும் பிரதிவாதிகள் எவ்வித பதிலறிவிப்பும் அனுப்பாமலும் காலதாமதம் செய்து வருவதாகவும், அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையில் தமிழ்நாடு பட்டா பாஸ்புக் பதிவு சட்டத்தின்படி இந்த வழக்கை செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய முடியாது என்று சர்வே எண்ணில் ஏதாவது தவறுகள், மாற்றங்கள், அளவீடுகள் மாறியிருந்தால் அதை பொறுத்து பட்டா பாஸ்புக் சட்டத்தின்படிதான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க முடியாது என்றும், மேலும் உரிய அலுவலரின் உத்தரவில் திருப்தி இல்லை என்றால் வருவாய் துறையில் உரிய அலுவலரிடம் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும், இந்த 2ம்

வாதி மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி விசாரணை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், 101/11 ஏ 1 ல் யூடிஆரில் கோவிந்தகோனார், சுப்பரமணியகோனார் பெயரில் இருந்து அதை அவர்கள் வெங்கடாசல கோனார் மகன் கோவிந்தராஜ் பெயரில் கிரய ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், எனவே அந்த சர்வே எண்ணில் யூடிஆரில் திருத்தம் இல்லை என்றும், 101/11 ஏ 2 ல் வாதிகளுக்கு முழு அனுபவம் உள்ளது என்றும், அது கோவிந்த கோனார் மகன் வெங்கடாசல கோனார் பெயரில் உள்ளது என்றும், அதில் வாரிசுகள் பெயரில் பட்டா மாற்றத்திற்கு மனு செய்யலாம் என்றும், 101/11 ஏ 1 ல் கிரயம் பெற்ற கோவிந்தராஜ் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று ஆட்சேபணை செய்துள்ளதாகவும், எனவே, எவ்வித நடவடிக்கையும் பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்று கூறுவது தவறு என்றும், கொரோனா சம்பந்தமான பணிகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளில் பிரதிவாதிகளுக்கு இருந்தும் வாதிகளின் மனுவிற்கு உரிய விசாரணை செய்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேல்முறையீட்டிற்கு வாய்ப்புள்ள போதிலும் அதை விடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றும் கூறப்பட்டுள்ளது.

4) வாதிகள் தரப்பில் 2 ம் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "கடைசியாக எங்கள் பகுதியில் யூடிஆர் எப்போது நடந்தது என்றால் 1984,1985 வருடங்களில் நடந்தது என்றும், அவ்வாறு யூடிஆர் நடந்தபோது யூடிஆர் பட்டா வழங்கப்பட்டதில் எந்த தவறுகள் இருந்தால் உடனடியாக தெரிவிக்கலாம் என்று எனக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது என்றால் எனக்கு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றும், இது சம்மந்தமாக மாவட்ட

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:44 +0530

கெசட்டிலும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் தனக்கு அதுபற்றி தெரியாது என்றும், 1984 ல் கொடுக்கப்பட்ட யூடிஆர் பட்டாவில் தவறு நடந்துள்ளது என்பது தனக்கு 2013 ல் நிவாரணம் கொடுக்கும்போதுதான் தனக்கு தெரிய வந்தது என்றும், 2013 ல் என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டது என்றால் நெல்லுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டது என்றும், தனது நிலத்திற்கு அரசாங்கத்தில் பட்டா பாஸ்புத்தகம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை என்றும், தனது அப்பாவின் வாரிசுகள் 5 நபர்கள் உள்ளோம் என்றும், மற்ற நபர்களை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றும், 2013 ம் ஆண்டு தவறாக கொடுக்கப்பட்ட பட்டாவை எதிர்த்து தான் மேல் அதிகாரிகளுக்கு மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை என்றும், தனக்கு சொந்தமான புல எண்கள் 101/11 ஏ 1, 101/11 ஏ 2, 101/11 சி என்றும், புல எண்.101/11 ஏ 1 விஸ்தீரணம் 0..02.0 ஏர்ஸ் சுப்ரமணியன் பெயரில் உள்ளது என்றால் யூடிஆர் பட்டா தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், புல எண்.101/11 ஏ 2 விஸ்தீரணம் 0.04 ஏர்ஸ் வெங்கச்சி பெயரில் உள்ளது என்றால் தவறு வெங்கடாச்சலம் பெயரில் உள்ளது என்றும், புல எண்.101/11 சி 0.03.0 ஏர்ஸ் வெங்கடாச்சல கோனார், சுப்பரமணிய கோனார், நாராயணகோனார் ஆகியோர் பெயர்களில் பட்டா உள்ளது என்றால் சரிதான் என்றும், மேற்படி 3 நபர்களில் நாராயண கோனார் தனது தந்தை என்றும், வெங்கடாச்சலகோனார், சுப்ரமணிய கோனார் ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், அவர்கள் பட்டா மாற்றிக்கொள்ளுங்கள் தங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று சொல்லி விட்டார்கள் என்றும், கூட்டுப்பட்டாவில் தவறாக சேர்க்கப்பட்டுள்ள இரண்டு நபர்களின் பெயர்களை நீக்கி நாராயண கோனார் வாரிசுகளுக்கு மட்டும் பட்டா கொடுக்குமாறு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் என்றும், எங்கள் குடும்பத்திற்கு மட்டும் கூட்டுப்பட்டாவில் இருந்து தனியாக உட்பிரிவு செய்து

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:48 +0530

பட்டா கொடுக்க வேண்டும் என்று மனு கொடுத்தேனா என்றால் இல்லை என்றும், வெங்கடாச்சல கோனார் மகன் கோவிந்தராஜ கோனார் பெயரில் 2020 ம் வருடத்தில் இதே சர்வே எண் சம்மந்தமாக ஒரு கிரைய பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் யூடிஆர் பட்டாவை பயன்படுத்தி கிரைய பத்திரம் செய்துள்ளார்கள் என்றும், அதில் தனது தென்னம்பிள்ளை, பாத்ரூம் உள்ளது என்றும், அவர்களையும் இந்த வழக்கில் தான் சேர்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், புல எண். 101/11, மற்றும் புல எண்,101/11 ஏ 1 ல் எங்களுக்கு எந்த திருத்தமும் இல்லை என்றால் திருத்தம் வேண்டும் என்று கேட்டிருந்தோம் என்றும், புல எண்.101/11 ஏ 2 ல் வாரிசுகள் அனைவருக்கும் பட்டா கொடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் அவ்வாறு தெரிவிக்கவில்லை என்றும், யூடிஆரில் தவறு ஏற்பட்டிருந்தால் மேல்முறையீடுதான் செய்யவேண்டும்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5) வா.சா.1 குறுக்கு விசாரணையின் மூலம் வாதிகளின் மற்ற சகோதர சகோதரிகளை, நாராயண கோனாரின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் புல எண்.101/11 சி-ல் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதாக கூறப்படும் வெங்கடாசல கோனார், சுப்பிரமணிய கோனார் ஆகியோரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

6) பிரதிவாதிகள் தரப்பில் மண்டல துணை வட்டாட்சியர் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவருடைய குறுக்கு விசாரணைக்காக பலமுறை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டும், பி.சா.1 வராததால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:53 +0530

முடிக்கப்பட்டு, வாதுரைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

7) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் வாதிகளின் மனு பரிசீலனை செய்யப்பட்டு, புல எண்.101/11 சிக்கு நாராயண கோனாரின் வாரிசுகள் பெயரில் பட்டா மாற்றம் செய்து ஆணை வழங்கலாம் என்று புல எண்.11 ஏ 1ல் தவறாக பதிவுள்ள சுப்பிரமணிய கோனார் பெயரையும், வெங்கடாசல கோனார் பெயரையும் நீக்கி நாராயண கோனாரின் வாரிசுகள் பெயரில் பட்டா மாற்றம் செய்து ஆணை வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. பட்டா மாறுதல் வழங்க 4ம் பிரதிவாதிக்கு வேதாரண்யம் வட்டாட்சியர் வா.சா.ஆ.2 மூலம் பரிந்துரை வழங்கியுள்ளது தெரியவருகிறது.

8) வழக்கு சொத்துக்கள் வேதாரண்யம் வட்டாட்சியரின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் நிலையில் 5ம் பிரதிவாதியாக நாகப்பட்டினம் வட்டாட்சியரின் வழக்கு தேவையில்லாமல் சேர்த்துள்ளது தெரியவருகிறது. மேலும் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் வழக்கு மூலங்கள் ஏற்பட்ட சமயத்தில் உள்ள அலுவலர்களை அவர்களுடைய personal capacity தனிப்பட்ட பொறுப்பு ஏற்படுத்தி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். வழக்கில் நாராயண கோனாரின் வாரிசுகள் அனைவரையும் தரப்பினராக சேர்க்கவில்லை. பட்டா மாற்றுதல் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில், பட்டாவில் பெயர் உள்ள சுப்பிரமணிய கோனார், வெங்கடாசல கோனார் ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை. மேலும், அரசு அலுவலகங்களின் தனிப்பட்ட பொறுப்பை ஏற்படுத்தியும், வழக்கு தாக்கல் செய்யாமல் பொதுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வாதிகளுக்கு எதிராக உரிய தரப்பினரை

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:56:59 +0530

சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று கூடுதல் எழுவினா-1 க்கு தீர்வு காணப்படுகிறது.

9) வருவாய் அலுவலர்கள் உரிய முறையில் விசாரணை செய்து நாரயணகோனாரின் வாரிசுகளுக்கு பட்டா வழங்கலாம் என்று உத்தரவிட்டுள்ள நிலையில் பட்டா பாஸ்புக் சட்டத்தின்படி நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், நிர்வாக காரணங்களுக்கான தாமதத்திற்காகவும் அரசு அலுவலர்களுக்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்ய வழிவகை இல்லை. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் கண்டுள்ளவாறு உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பெற வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். எனவே, பட்டா பாஸ்புக் பதிவு சட்டத்தின்படி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றும், Writ of Mandamus பரிகாரம் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கோரவேண்டும் என்றும் முடிவு செய்து, தமிழ்நாடு பட்டா பாஸ்புக் பதிவு சட்டத்தின்படி இந்த வழக்கை செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்று பிரதிவாதிகள் கூறும் கூற்று சரிதான் என்று எழுவினா-3 க்கு வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

## VI. <u>எழுவினா 1 மற்றும் 2 க்கான தீர்வு</u>

எழுவினா 3 மற்றும் கூடுதல் எழுவினா-1க்கு வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் வாதிகளுக்கு பிரதிவாதிகள் ரூ.2,00,000/- இழப்பீட்டு தொகை கொடுக்க வேண்டும் என வாதிகள் கோரும் இழப்பீட்டு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் தாவா சொத்துக்கு இறந்துபோன நாராயண கோனாரின்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:57:04 +0530

சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு தவறுகளை சரிசெய்து பிரதிவாதிகள் பட்டா வழங்க வேண்டும் என வாதிகள் கோரும் ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் எழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கு வாதிகளுக்கு எதிராக என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

VII. **<u>எழுவினா-4 க்கான தீர்வு</u>**

மேற்படி வழக்கில் எழுவினாக்கள் 1 முதல் 3 மற்றும் கூடுதல் எழுவினா.1 க்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து எழுவினா-4 க்கு தீர்வு காணப்படுகிறது.

VIII. **முடிவில்**

**வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்து இன்று 11.08.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.08.11 18:57:09 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. இளங்கோவன் (2 ம் வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.08.1958 | நாராயணக் கோனார் பெற்ற கிரைய சாசனம் | (சான்று நகல்) |
| வா.சா.ஆ.2 | 10.06.2013 | வேதாரண்யம் வட்டாட்சியர் நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலரிடம் சமர்ப்பித்த அறிக்கை | (நகல்) |
| வா.சா.ஆ.3 | 01.10.2019 | நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலகத்தில் கொடுத்த குறிப்பாணை | (நகல்) |
| வா.சா.ஆ.4 | 05.10.2020 | வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக | (நகல்) |
| வா.சா.ஆ.5 | -- | வழக்கறிஞர் அறிவிப்பை 3 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் | (நகல்) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.சா.1. திரு. கலாநிதி- வேதாரண்யம் மண்டல துணை வட்டாட்சியர்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணம்</u>** :

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ-1 | 14.12.2021 | வேதாரண்யம் வட்டாட்சியரின் கடிதம் | (நகல்) |
| பி.சா.ஆ 2 | 29.04.2019 | 2 ம் வாதி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் | (நகல்) |

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.08.11 18:57:14 +0530

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.3 | 08.05.2019 | நாகப்பட்டினம் மாவட்ட வருவாய் அலுவலர், வேதாரண்யம் வட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதம் | (நகல்) |
| பி.சா.ஆ.4 | 07.01.2021 | வேதாரண்யம் வட்டாட்சியர் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதம் | (நகல்) |

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.08.11 18:57:22 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **தீர்ப்புரை**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண்.56/2021**

நாள்: 11.08.2026